STC No. 323/2025 02.06.2026

PW 1, ஜார்ஜியான் S/o. இப்ராகிம்

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் MBA படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் இன்சுரன்ஸ் ஏஜென்டாக வேலை செய்கிறேன். எதிரியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 2018, 2019 காலகட்டத்திலிருந்து தெரியும். எதிரி எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் திருப்புவனம். எதிரி மதுரை, அண்ணாநகரில் உள்ள பிகேஜி நிறுவனத்தில் கணக்காளராக வேலை செய்தார் என்றால் சரிதான். எனது மாமா மீரா மைதீன் முலமாகத்தான் பிகேஜி நிறுவனத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். எனது மாமா மீராமைதீன் தான் எதிரியை எனக்கு அறிமுகப்படுத்தினார் என்றால் சரிதான். எனது மாமா மீராமைதீன் பிகேஜி மார்கெட்டிங் நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல் நானும் அந்த நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவியின் பெயர் என்ன என்றால் ஷாகின்பானு. எனது மனைவியும் அந்த நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளார் என்றால் இல்லை. எனது மனைவியும் அந்த நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளார், அதற்கான ஆவணங்கள் உள்ளது, அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) எனது புகார் மனவிலோ, நிருபண வாக்குமூலத்தில் எதிரிக்கு ரூ.4 லட்சம் கொடுத்தாக சொல்லியுள்ளேன், அந்த ரூ.4 லட்சத்தை வங்கி கணக்கிலிருந்து எடுத்துக்கொடுத்தேனா என்றால் இல்லை, எனது கையில் இருந்த பணத்தை கொடுத்தேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். நான் சொன்னதுபோல் கடந்த 18.10.2024ம் தேதி எதிரிக்கு கொடுத்த பணத்தை எனது வருமான வரி கணக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை.

எனது வருமான வரி கணக்கை காண்பித்தால் நான், எதிரிக்கு ரூ.4 லட்சம் கொடுத்தேனா என்ற உண்மை நிலை தெரிய வரும் என்றால் சரியல்ல. முறைப்படி ஒரு நபருக்கு ரூ.1 லட்சத்திற்கு மேல் கடனாக பணம் கொடுத்தால், வங்கி கணக்கு மூலமாகத்தான் கொடுக்க வேண்டும், ரொக்கமாக கொடுக்க கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) எதிரி பிகேஜி நிறுவனத்தில் வேலை செய்த போது அவரிடம் தனிப்பட்ட முறையில் நான் ரூ.4,50000/- முதலீடாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த தொகையை 6 தவணையாக கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி தொகையை மாதம், மாதம் சிறுது, சிறிதாக மொத்தம் ரூ.4,08650 செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு நான் பிகேஜி மார்கெட்டிங் நிறுவனத்தில் முதலீடாக கொடுத்ததற்கு ஆதரவாக இவ்வழக்கின் காசோலையை எதிரியிடமிருந்து பெற்றேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் பிகேஜி நிறுவனத்தில் முதலீடு செய்த பணத்திற்கு ஆதரவாக இவ்வழக்கின் காசோலையை பெற்றேன் என்றால் சரியல்ல. பிகேஜி மார்கெட்டிங் நிறுவனத்தில் நான் செலுத்திய பணத்திற்கு ஆதரவாகதான் இவ்வழக்கின் காசோலை எதிரிக்கு கொடுத்தார் என்பதற்கு ஆதரவாக நானும், எதிரியும் பேசிக்கொண்ட செல்போன் பதிவுகள் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் இவ்வழக்கின் காசோலைக்கும், பிகேஜி நிறுவனத்திற்கும், நான் செய்த முதலீட்டிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. இவ்வழக்கின் காசோலை எதிரியின் வீட்டிற்கு சென்றுதான் நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல, மேலூரில் உள்ள எனது வீட்டில்தான் காசோலை கொடுத்தார். மேலூரில் வைத்து எதிரி என்னிடம் காசோலை பெறவில்லை, எதிரியின் வீட்டிற்கு சென்று அவரது மனைவியிடம் தகாத வார்த்தையால் பேசி சண்டை போட்டதால்தான், வேறு வழியில்லாமல் எதிரி இவ்வழக்கின் காசோலையை ஆதரவாக கொடுத்தார் என்றால் சரியல்ல.

4) எதிரிக்கு நான் பணம் கொடுத்த அங்கு வேறு யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. எதிரி எந்த காரணத்திற்காக என்னிடம் பணம் கேட்டார்

என்றால் பிகேஜி நிறுவனம் நொடிந்துவிட்டதனால் என்னிடம் முதலீடாக பணம் கேட்டார், இதற்கு முன்னர் அந்நிறுவனத்தில் முதலீடாக பணம் கொடுத்த இழந்துவிட்டதனால் அதனால் நான் 1 மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாக சொன்னதனால் கடனாக அவரிடம் பணம் கொடுத்தேன். அதன்பின்னர் எதிரி என்னிடம் மாதந்தோறும் பணம் செலுத்தினாரா என்றால் இல்லை. எதிரி எப்போது என்னிடம் ரூ.4 லட்சம் பணம் வாங்கவில்லை, எதிரி பொய்யாக பணம் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் பிகேஜி நிறுவனத்தில் நான் செலுத்திய ரூ.4,50000/- எதிரி பல தவணைகளாக ரூ.4,08650 /- செலுத்திவிட்டார் மீதம் ரூ.50000/- மட்டும் செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல. எதிரி பணம் மீண்டும் செலுத்தாதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி அவர் செலுத்தவேண்டிய ரூ.50000 மீண்டும் தர தயாராக உள்ளார் என்றால் வழக்கின் காசோலை தொகையான ரூ.4 லட்சம் எதிரி திரும்ப தரவேண்டியுள்ளது. எதிரி நான் பொய்யான விவரங்களுடன் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால், இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியவை என்றால் சரியல்ல.